# கடற்கரை கவியரங்கு– 647

## நாள்: 02-03-2025

# ஆளுவோம் மனம்தன்னை!

ஆடும் உள்ளத்தில் ஆயிரமாய்க் கற்பனைகள்!
நாடும் வாழ்வுதனில் நலிவேற்றும் சிந்தனைகள்!
தேடும் உறவுகளில் தெளிவில்லா மனக் கோலம்!
சாடும் மனம்தன்னில் சத்தில்லாச் சூழல்வந்து,

பாடும் மனமெழுந்து பரிதாபம் தான் கொள்ளும்!
வாடும் மனமதற்கு வளம் தருமோ பாடல்களே!
கூடும் துன்பத்தில் கொள்கைகள் தானுண்டோ?
ஏடும் எழுதிவைக்கும் எண்ணிறந்த கதைகளையே!

நாடும் உள்ளத்தில் நலம் செய்யும் அறிவுண்டோ?
தேடும் அறிவுந்தான் தெளிந்திடும் நாளெதுவோ?
சூடும் சிந்தையதே சோர்வை நீக்கி விடும்!
ஆடும் உள்ளமதும் அடுத்து கதைக் கேட்கும்!

ஆளும் சிந்தையைத்தான் அளவிட்டுச் செய்திடுவோம்!
மூளும் இன்பத்தின் முகவரிகள் அறிந்திடுவோம்!
மீளும் உலகியலின் மேன்மைகள் தெளிந்திடுவோம்!
தோளும் கரந்தாங்கும் கொள்கைதான் வாழ்க்கையது!

தோல்வியாய் மனமிருந்தால் துயர்கள்தான் தெரியும்!
வேள்வியாய் மனந்தன்னை விருப்புடன் மாற்றிவிட,
கேள்விகள் யாவுக்கும் கிடைத்திடும் விடைதானே?
ஊழ்வினை என்பதும் ஓர் ஊட்டிய அறிவுதானே?

**- கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**
01-03-2025 (இரவு 10-00)